# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,630 — 1958 දෙසැම්බර් 29 වැනි සඳුද 29.12.1958

11,630 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 29 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

### விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை—ரி./16/58.

மீன் கருவாடும், இறால் கருவாடும்.

**1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் உப-விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு உப-விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), அன்ரன் றெருத்வெல் மெக்கெய்ஸர் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ந் திகதியைக்கொண்ட 11,405 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஜூன் மாதம் 27 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட ரி./8/58 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இறுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்டுள்ள வர்ணனைக் கொண்ட மீன் கருவாட்டையும், இறால் கருவாட்டையும் இந்த விலைகளுக்குக் கூடுதலாக 2 ம், 3 ம், 4 ம் பத்திகளின் தலைப்பில் சொல்லப்பட்ட இடங்களில் விற்றலாகாது.

(3) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 3 ம் பத்தியின் கீழ் திருகோணமலை நகரசபை எல்லைக்குள் என விதிக்கப்பட்ட விலைகளை 2 ம் அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிப்பிட்ட தொகைகளினால் அதிகரித்து அவ்வதிகரித்த விலைகளையே 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் காட்டப்பட்ட இடங்களில் 1 ம் அட்டவணையின் முதலாம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருள்களின் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் காட்டப்பட்ட பொருள்களின் நிகர இறுத்தல் ஒன்றை இவ்விலைகளுக்குக் கூடுதலாக 2 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் காட்டப்பட்ட இடங்களில் விற்றலாகாது.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக —

(அ) எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இறால் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு நிகர அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(ஆ) ஒரு அந்தருக்குக் குறைந்த எத்தொகையான மீன் கருவாட்டையோ, அல்லது இறால் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) "காய்ந்த மீன்" என்பது மீன் கருவாட்டையே குறிக்கும் என்பதாம்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் எவராவது குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரித்துள்ள வர்ணனையைக் கொண்ட மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரித்துள்ள வர்ணனையைக்கொண்ட மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ் வாகனத்தில் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரித்துள்ள அப்பொருள்களுக்கு அவ்விடப்பரப்பில் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இறுத்தல்" அல்லது "இறு." என்பது அவ்வோர்டுபோஸ் எத்தலளவை முறையின் பிரமாண இறுத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரித்துள்ள மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து, அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்பனை செய்யப்பட்ட பொருளின் வர்ணனை ;
(இ) விற்ற பொருளின் மொத்த நிறையும், நிகர நிறையும் ;
(ஈ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(உ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரித்துள்ள மீன் கருவாடும், இறால் கருவாடும் விற்கப்படும் இடத்து இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(10) இக்கட்டளையால் முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் கும்பளா, பொம்பிலி, நெத்தலி, இறால் கருவாடு முதலியவை தவிர்ந்த மற்றைய எந்த மீன் கருவாடோ எவ்விதமாகவேனும் விற்கப்படின் அவைகளின் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்திற்கும் ஆகக் குறைந்தது கழிவாக 10 இறுத்தல் குறைத்துக் கணக் கிடப்படும்.

(11) இக்கட்டளையால் முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் கும்பளா கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்திற்கும் ஆகக் குறைந்தது கழிவாக 25 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(12) இக்கட்டளையால் முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் பொம்பிலி கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்திற்கும் ஆகக் குறைந்தது கழிவாக 8 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(13) இக்கட்டளையால் முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் நெத்தலி கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்திற்கும் ஆகக் குறைந்தது கழிவாக 20 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(14) இக்கட்டளையால் முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் ஓடற்ற இறால் கருவாடு அல்லது ஓடுள்ள இறால்கருவாடு கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத் திற்கும் ஆகக் குறைந்தது கழிவாக 15 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(15) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " நிகர " என்பது மீன் கருவாட்டின் அல்லது இறால் கருவாட்டின் கழிவு, அல்லது வெறும் நிறை, குறைந்த மொத்த நிறையாகும்.

1958 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ந் திகதி முற்பகல் 10 மணிக்கு திருகோணமலைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

அன்ரன் ஆர். மெக்கெய்ஸர்,
உப-விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
திரிகோணமலை மாவட்டம்.

**முதலாம் அட்டவணை**

| பகுதி 1 | பகுதி 2 | பகுதி 3 | பகுதி 4 |
|---|---|---|---|
| விபரம் | திரிகோணமலை பட்டணமும் குடாக்கரை காரியாதிகாரியின் பிரிவில் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடிய மொத்த விலை | திரிகோணமலை நகரசபை வட்டாரத்தில் ஒரு நிகர இறுத்தலின் ஆகக்கூடிய சில்லறை விலை | கொட்டியார் பற்றும், தம்பலகாமப் பற்றும், கட்டுக்குளப் பற்றுக் காரியாதிகாரியின் பிரிவுகளில் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடிய மொத்த விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| அறக்குளா தலையில்லாமல் | 116 60 | 1 24 | 118 00 |
| அறக்குளா தலையுடன் | 98 06 | 1 24 | 99 46 |
| கட்டா தலையில்லாமல் | 85 17 | 0 89 | 87 10 |
| முழுக் கட்டா | 65 10 | 0 89 | 66 50 |
| அஞ்சிலா தலையுடன் | 58 92 | 0 72 | 60 32 |
| அஞ்சிலா தலையில்லாமல் | 63 04 | 0 72 | 64 44 |
| பாரை தலையில்லாமல் | 96 00 | 1 03 | 97 40 |
| பாரை தலையுடன் | 77 46 | 1 03 | 78 86 |
| கொடுவா தலையில்லாமல் | 85 70 | 0 87 | 87 10 |
| கொடுவா தலையுடன் | 60 98 | 0 87 | 62 38 |
| சூரை | 85 70 | 0 98 | 87 10 |
| தொண்டன் | 65 15 | 0 72 | 66 55 |
| கும்பளா | 26 46 | 0 32 | 27 86 |
| பொம்பிலி | 77 46 | 0 92 | 78 86 |
| நெத்தலி | 73 34 | 0 87 | 74 74 |
| ஓடற்ற இறால் கருவாடு | 116 60 | 1 12 | 118 00 |
| ஓடுள்ள இறால் கருவாடு | 91 88 | 0 87 | 93 28 |

**இரண்டாம் அட்டவணை**

| பகுதி 1 | பகுதி 2 |
|---|---|
| எல்லை | முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்ட பொருட்களின் திரிகோணமலை நகர சபை எல்லைக்குள் விதிக்கப்பட்ட விலைகளினும் பார்க்க அதிகரித்த தொகை |
| கிராம விதானையின் பகுதிகள் :— | |
| உப்புவெளி, சாம்பற்தீவு | அதிகரிப்பு இல்லை |
| | ரூ. ச. |
| சீனன்வாடி, வெள்ளமணல், தம்பலகாமம், நிலாவெளி | 0 01 |
| சின்னக்கின்னியா, பெரியகின்னியா, குறிஞ்சாக்கேணி, உப்பார், கந்தளாய், மூதூர், அக்கரைச் சேனை, சம்பூர், மல்லிகைத்தீவு, கிளிவெட்டி, தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு, கும்புறுபிட்டி | 0 02 |
| கூனித்தீவு, ஈச்சிலாம்பத்தை, குச்சவெளி, பெனிக்கெட்டியாவ, கோமரங்கடவெல | 0 03 |
| திரியாய், மெதவாச்சியா, கல்கடவெல | 0 04 |
| புல்மோட்டை | 0 05 |
| தென்னமரவடி, பரணமதவாச்சியா | 0 06 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

உணவு விலைக் கட்டளை இல. வி. 55 — உப உணவுப் பொருட்கள்.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு வவுனியா மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி, பராசசேகரம்பிள்ளை தம்பையா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஆனி மாதம் 25 ந் திகதியைக்கொண்ட 11,378 ம் இலக்க விசேட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆனி மாதம் 20 ந் திகதியைக்கொண்ட வி. 47 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் விபரிக்கப்பட்டிருக்கும் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியவையைப் பொறுத்தமட்டில் முதலாம் அட்டவணையில் காணப்படும் மீன் கருவாட்டுக்கு விபரிக்கப்பட்டிருக்கும் விலைக் கட்டளைகளை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் குறித்த விலைகளிலும் பார்க்கக் கூடுதலாக விற்றலாகாது ;

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இருல் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு நிகர அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படுமென்று கட்டளையிடுகிறேன் ;

(ஆ) ஒரு அந்தருக்குக் குறைந்த எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இருல் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படுமென்றும் கட்டளையிடுகிறேன் ;

(இ) ஆகக்கூடிய சில்லறை விலை என்பது எல்லாச் சில்லறை விற்பனைகளையும் குறிக்கும் ;

(ஈ) " காய்ந்த மீன் " என்பது " மீன்கருவாட்டையே " குறிக்கும் என்பதாம்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் எவராவது குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரித்துள்ள வர்ணனையைக் கொண்ட மீன் கருவாட்டை அல்லது இருல் கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் மீன் கருவாட்டை அல்லது இருல் கருவாட்டைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், குறித்த முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் அப்பொருட்களுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்று கட்டளையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவன வற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(8) குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விலைகளையும் சில்லறை விலைகளையும் அல்லாது விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமெனக் கட்டளையிடுகிறேன் ;

(9) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் கும்புளா, பொம்பிலி, இருல் கருவாடு முதலியவை தவிர்ந்த எந்த மீன் கருவாடோ எவ்விதமாகவெனினும் விற்கப்படின் அவைகளின் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 10 இருத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(10) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் கொம்பளா கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 25 இருத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(11) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் பொம்பிலி கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கு ஆகக் குறைந்தது 8 இருத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(12) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் நெத்தலி கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது 20 இருத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(13) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் புற ஓடற்ற இருல் கருவாடு அல்லது புற ஓடுள்ள இருல் கருவாடு கொள்கலங்களில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 15 இருத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(14) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " நிகர " என்பது மீன் கருவாட்டின் அல்லது இருல் கருவாட்டின் கழிவு அல்லது வெறும் நிறை குறைந்த மொத்த நிறையாகும்.

1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ந் திகதி காலை 10 மணிக்கு வவுனியாவில் கையொப்பமிடப்பட்டது.

ப. தம்பையா,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), வவுனியா.

## முதலாம் அட்டவணை

| பத்தி 1 | | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|---|
| | | வவுனியா தெற்கு (தமிழ்) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த ஆசிகுளம், வவுனியா நொச்சி மோட்டை நெடுங்குளமும், புதுக்குளமும் வவுனியா தெற்கு (சிங்கள) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த மடுக்கந்தையும் ஈரப் பெரியகுளமும் | |
| நம்பர் | விபரம் | நிகர அந்தர் ஒன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலை | நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக் கூடிய சில்லறை விலை |
| | | ரூ. ச. | ரூ. ச. |
| 1. | அறக்குளா தலையில்லாமல் | 118 60 | 1 30 |
| 2. | அறக்குளா தலையுடன் | 99 52 | 1 00 |
| 3. | கட்டா தலையில்லாமல் | 86 80 | 0 85 |
| 4. | முழுக்கட்டா | 65 60 | 0 75 |
| 5. | அஞ்சிலா தலையுடன் | 59 24 | 0 70 |
| 6. | அஞ்சிலா தலையில்லாமல் | 63 48 | 0 80 |
| 7. | பாரை தலையில்லாமல் | 97 40 | 1 10 |
| 8. | பாரை தலையுடன் | 78 32 | 0 75 |
| 9. | கொடுவா தலையில்லாமல் | 86 80 | 0 90 |
| 10. | கொடுவா தலையுடன் | 61 36 | 0 62 |
| 11. | சூரை | 86 80 | 0 90 |
| 12. | தொண்டன் | 65 65 | 0 75 |
| 13. | கும்பளா | 25 86 | 0 35 |
| 14. | பொம்பிலி | 78 32 | 0 95 |
| 15. | நெத்தலி | 74 08 | 0 90 |
| 16. | ஓடற்ற இறுல் கருவாடு | 118 60 | 1 15 |
| 17. | ஓடுள்ள இறுல் கருவாடு | 93 16 | 0 90 |

## இரண்டாவது அட்டவணை

| பத்தி 1 | | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|---|
| நம்பர் | பகுதி | முதலாம் அட்டவணையில் 2 ம் பத்தியில் குறித்த விலையிலும் பார்க்க ஒரு மொத்த வியாபாரி நிகர அந்தர் ஒன்றுக்குச் சேர்த்து விற்கும் மொத்த விலை | முதலாம் அட்டவணையில் 3 ம் பத்தியில் குறித்த விலையிலும் பார்க்க ஒரு சில்லறை வியாபாரி இருத்தல் ஒன்றுக்குச் சேர்த்து விற்கும் சில்லறை விலை-ஆகக்கூடிய |
| | | ரூ. ச. | ரூ. ச. |
| 1. | வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் (தமிழ்) பிரிவுக்குச் சேர்ந்த மருதங்குளம், மருதமடு, இராசேந்திரன்குளம்<br>வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (சிங்கள) பிரிவுக்குச் சேர்ந்த சூடுவெந்தபுலவு, மருதமடுவைத் தவிர்ந்த உலுக்குளம் | 0 25 | 0 01 |
| 2. | வவுனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் தமிழ் பிரிவுக்குச் சேர்ந்த பெரிய புளியங்குளம், வாகைகட்டின ஒலுக் குளம்<br>வாழைவைத்தகுளம், வவுனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் (சிங்கள) பிரிவில் உலுக்குளம் பகுதிக்குச் சேர்ந்த மருதமடு கிராம விதானையின் பகுதி | 0 50 | 0 01 |
| 3. | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த நெடுங்கேணி, மாங்குளம், ஒலுமடு, கனகராயன்குளம், புளியங்குளம் | 0 50 | 0 01 |
| 4. | வவுனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த பரந்தன், மணவாளன்பட்டமுறிப்பு தண்டுவான், கச்சிலமடுவும் ஊஞ்சல்கட்டியும் | 0 75 | 0 02 |
| 5. | வவுனியா கரை துறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த முள்ளியவளை, தனியூற்று, முல்லைத்தீவும் வாளைமுள்ளிவாய்க்காலும் | 1 00 | 0 02 |
| 6. | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்நத குமுளமுனை, புதுக்குடியிருப்பும் அம்பலவன் பொக்கணையும் | 1 25 | 0 02 |
| 7. | வவுனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த கொக்கிளாயும் கொக்குத்தொடுவாயும் | 1 50 | 0 03 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.